**எஹெலியகொட பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 12 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 ஜுன் 30 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் எஹெலியகொட பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செலுத்துவதற்கு தேவையில்லை என தீர்மானிக்கப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 17,337,497 ஆன கடன்கொடுனர் மீதியை மீளாய்வாண்டினுள் வருமானத்திற்கு எடுத்திருந்த போதும் அதற்குரிய கடன்படுனர் ஏற்பாடு ரூபா 16,131,966 இற்காக தேவையான சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | வேலைக் கடன்கொடுனர் மீதியை வருமானத்திற்கு எடுக்கையில் அதற்குரிய கடன்படுனர் மீதியையும் இனங்கண்டு அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டு கணக்குகள் தயாரிக்கையில் சரி செய்வதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | முன்னைய ஆண்டுகளிற்குரிய முத்திரைக் கட்டண குறை ஒதுக்கீடு ரூபா 16,085,176 இற்காக சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | முன்னைய ஆண்டுகளிற்குரிய வருமானம் திரண்ட நிதியம் ஊடாக சீராக்கம் செய்ய வேண்டும். | கணக்கீட்டு தவறொன்று ஏற்பட்டுள்ள போதும், குறைநிரப்பு மதிப்பீடொன்றின் மூலம் குறித்த பணத்தை சபை நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தும் தேவையின் மீது அவ்வாறு செய்ததாக அறிவிக்கிறேன். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் தேசிய கடன் அபிவிருத்தி நிதியத்தின் கடன் மீதி ரூபா 5,763,488 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | கடன் கணக்கு மீதியை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்கு தயாரிக்கும் போது ஏற்பட்டுள்ள தவறொன்று ஆகையால், எதிர்காலத்தில் சரி செய்வதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | தேசிய கடன் அபிவிருத்தி நிதியத்தின் கடனிற்கான மீளாய்வாண்டிற்குரிய வட்டி ரூபா 1,084,240 செயற்பாட்டு செலவாக கணக்கு வைக்கப்படாததுடன், அவற்றில் ரூபா 1,000,000 திரண்ட நிதியத்திற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | ஆண்டுக்குரிய செலவுகளை சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்பாடாதவாறு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (உ) | பண்டக கணிப்பீட்டு சபையினால் பராதீனம் செய்ய தீர்மானிக்கப்பட்ட சொத்துக்கள் பராதீனம் செய்யப்பட முன் ஏடுகளிலிருந்து அகற்றப்பட்டிருந்ததால் நடைமுறையல்லாத சொத்துக்கள் ரூபா 344,169 இனால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | சொத்துக்கள் பராதீனம் செய்யப்பட்ட பின் சொத்துப் பதிவேடுகளிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த ஆண்டிலேயே ஏலவிற்பனை பண்டங்களின் மற்றும் அழிக்கப்பட்ட பண்டங்களின் பெறுமதியை ஏடுகளிலிருந்து அகற்றி பண்டங்களின் ஏலவிற்பனை வருமானத்தை எதிர்வரும் ஆண்டில் வருமானத்திற்கு எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஊ) | மீளாய்வாண்டிற்குரிய அட்டுறு செலவு ரூபா 314,559 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிற்குரிய செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதாக அறிவிக்கிறேன். |
| (எ) | 2019 ஆண்டிற்காக கணக்காய்வு கட்டணம் ஒதுகிடப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு கட்டணத்திற்காக ஏற்பாடு செய்யப்பட வேண்டும் | 2020 ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதாக அறிவிக்கிறேன். |
| (ஏ) | 10 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் நிதிக்கூற்றுக்கள் பிரகார மீதிகள் மற்றும் துணை பதிவேட்டு பிரகார மீதிகளிற்கிடையில் ரூபா 27,123,853 வித்தியாசம் நிலவியது. | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்படும் பெறுமானங்கள் துணைப் பதிவேடுகளுடன் இணங்க வேண்டும். | நிதிக்கூற்றுக்கள் மற்றும் துணை பதிவேடுகளிற்கிடையில் காணப்படும் வித்தியாசத்தை எதிர்காலத்தில் சரி செய்வதாக அறிவிக்கிறேன். |

## 1.4 இணங்காமை

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவம் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றுமு முகாமைத்துவம் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவம் தீர்மானங்களுடனான தொடர்ப்பு | | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 371(2)(இ) | 1995 முதல் 2019 வரையான காலப்பகுதியினுள் 66 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த கூட்டுத் தொகை ரூபா 2,238,382 ஆன முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை | நகர அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பெற்றுக் கொண்டுள்ள முற்பணம் நகர அபிவிருத்தி கணக்கால் தீர்ப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரத்திற்கு அனுப்பியுள்ளதாகவும், ஏனைய முற்பணத்தை தீர்க்க நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |
| (ii) | நிதிப்பிரமாணம் 571 | 2004 முதல் 2014 வரையான காலப்பகுதிக்குரிய கூட்டுத் தொகை ரூபா 1,850,056 ஆன வைப்பு மீதிகளை இனங்கண்டு தீர்த்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2004 முதல் 2014 வரையான காலப் பகுதிக்குரிய வைப்புக்கள் ரூபா 151,417 யை வருமானத்திற்கு எடுத்ததாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | 2018 ஜனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | ஆளணியிற்காக வருடாந்தம் கைச்சாத்திட வேண்டிய செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டு முதல் செயற்படுத்துவதாக அறிவிக்கிறேன். |
| (இ) | 2017 ஜூலை 25 ஆம் திகதிய 02/2017 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை | நிறுவன பொறுப்புக்களின் வெளியீட்டுடன் தொடர்புடைய வெளியீட்டு சுட்டிகள் மற்றும் முக்கிய செயலாற்றுகை சுட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் உரிய சுட்டிகளை இனங்காண வேண்டும். | எதிர்காலத்தில் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2018 ஜுலை 19 ஆம் திகதிய 2018/இ- உள்ளூராட்சி 01 ஆம் இலக்க உள்ளூராட்சி சுற்றறிக்கை | சேவை பெறுனர்கள் இனையத்தினூடாக சேவைகளிற்கு விண்ணப்பிக்கும் போது சந்தர்ப்பம் வழங்குவதற்காக தேவையான வசதிகளை நிலை நிறுத்த சபையிற்கு இயலாதிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் செயற்பட வேண்டும். | கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. |

**1.5 வரி தேவைப்பாடுகளுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, விற்பனை புரள்வு வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி வைப்புக் கணக்குகளில் 2015 ஆண்டிற்கு முன்னரிலிருந்து நிலவி வரும் கூட்டுத் தொகை ரூபா 1,962,284 ஆன மீதியை இனங்கண்டு தீர்த்திருக்கவில்லை. | உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டிய மீதி எனின் அதனை தாமதமின்றி அனுப்பவும், மீதியை இனங்கண்டு தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் | இவ் வைப்புக்களிலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததால், அவை சரியாக கணக்கீடு செய்யப்படவில்லை எனவும பரிசோதித்து சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,711,216 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,498,730 ஆக இருந்தது.

**2.2 நிதிக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 ஆண்டுகளிற்கு விஞ்சிய காலமாக செயலிழந்து காணப்படும் ரூபா 225,354 மீதியுடன் கூடிய ஒரு வங்கிக் கணக்கை செயற்பாட்டு நிலைக்கு கொண்டுவர அல்லது மூடிவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வங்கிக் கணக்கை செயற்பாட்டு நிலைக்கு கொண்டுவர அல்லது மூடிவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்வரும் 03 மாதங்களில் மகாசபைக்கு சமர்ப்பித்து இக்கணக்கு மீதியை சபையின் நடைமுறை கணக்கிற்கு மாற்ற நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் வரி | 9,670,500 | 8,989,609 | 6,869,587 | 17,602,784 | 8,716,500 | 8,911,406 | 7,025,062 | 15,858,134 |
| (ii) | வாடகை | 10,464,150 | 10,111,520 | 10,062,445 | 383,200 | 9,177,600 | 8,558,020 | 8,562,817 | 682,884 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,019,000 | 981,549 | 982,299 | 14,750 | 1,122,300 | 1,042,271 | 1,051,621 | 5,750 |
| (iv) | ஏனைய வருமானம் | 28,323,250 | 26,145,738 | 30,932,111 | 29,149,819 | 24,580,400 | 24,083,720 | 20,802,729 | 23,407,099 |
| | | **49,476,900** | **46,228,416** | **48,846,442** | **47,150,553** | **43,596,800** | **42,595,417** | **37,442,229** | **39,953,867** |

### 2.3.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரி** | | |
| 05 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலவிவரும் 1932 அலகுகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 8,954,421 ஆன நிலுவை மீதியை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறவிட முடியாது என இனங்காணப்பட்ட நிலுவை வீதவரியை பதிவழிக்க தற்போது ஆளுனரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், நடமாடும் சேவை நடாத்தி நிலுவை வீதவரி செலுத்தாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |
| **(ஆ) ஏக்கர் வரி** | | |
| 05 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலவிவரும் 149 அலகுகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 183,157 வை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏக்கர் வரி ஒப்பாய்வொன்றை மேற்கொண்டு நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணி உரிமையாளர்கள் தொடர்பான தகவல்களை கண்டறிய பிரதேச செயலகத்தின் மற்றும் கமநல சேவைகள் அலுவலகத்தின் உதவியை பெற்று நிலுவையை அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**2.3.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

**சுற்றாடல் அனுமதிப்பத்திரம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சுற்றாடல் அனுமதிபத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டுமென முன்னைய ஆண்டு இனங்காணப்பட்டிருந்த 24 வியாபார நிறுவனங்கள் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாமை தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்காததுடன், அதன் மூலம் சபைக்கு ரூபா 96,000 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | சுற்றாடல் அனுமதிபத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய அனைத்து நிறுவனகளுக்கும் முறையாக அனுமதிபத்திரம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 14 நாட்களினுள் சுற்றாடல் அனுமதிபத்திரத்தை பெற்றுக் கொள்ளுமாறு அறிவித்து அனுப்பப்பட்டுள்ளதாகவும், அதற்கு பதில் வழங்காத நிறுவனங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**2.3.4 நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 திகதியன்று அறவிட வேண்டியதாக இனங்காணப்பட்டிருந்த நீதிமன்ற தண்டபணம் ரூபா 2,348,000 ஆனதுடன், அறவிட வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 9,230,836 ஆனது. | சபைக்கு கிடைக்க வேண்டிய எல்லா வருமானங்களையும் அறவிட்டுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | இம் மீதிகளை 2020 ஆண்டினுள் அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**நிலைபேறான அபிவிருத்தி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பாக 2030 நிகழ்ச்சி நிரல் பற்றி சபை அறிந்திருந்த போதும் அந் நோக்கத்திற்கான உலகலாவிய குறிகாட்டிகளினூடாக சபை அதிகார எல்லையில் பொது மக்களின் வாழ்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கு நீண்ட கால திட்டம் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி திட்டம் 2020 ஆண்டில் தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### விளைவற்ற சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இயக்குனர் ஒருவர் இல்லாததால் சபைக்கு சொந்தமான மோடார் கிரேடர் 2015 ஆண்டு முதல் விளைவற்று நிலவியது. | விளைவுடன் பயன்படுத்த அல்லது தேவையுடன் கூடிய உள்ளூராட்சி நிறுவனமொன்றிற்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த மோடார் கிரேடரை கொலொன்ன பிரதேச சபையுடன் வாகன பரிமாற்றத்திற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | 2013 ஆண்டில் ஒதுக்கியிருந்த கெப் வண்டியொன்று பராதீனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒதுக்கிய வாகனத்தை பராதீனம் செய்ய வேண்டும். | குறித்த கெப் வண்டியை ஏலவிற்பனை செய்தல் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சினூடாக மேற்கொள்ள வேண்டியிருப்பதனால் அந் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கிறேன். |

### 3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் மூலம் அல்லது வேறு எழுத்து மூல சட்டத்தினால் அல்லது சுற்றறிக்கையினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரமின்றி 2018 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய 136 ஆம் இலக்க சபை தீர்மானத்தின் மீது, மக்கள் பிரதிநிதி மாதாந்த கொடுப்பனவைப் போன்று பத்து மடங்குகள் கொண்ட கடன் முற்பணமாக மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியன்று ரூபா 2,251,800 அறவிட வேண்டியதாக காணப்பட்டது. | மக்கள் பிரதிநிதிகளுக்கு கடன் முற்பணம் வழங்குவதற்கு எழுத்து மூலமான சட்டமொன்றின் கீழ் ஏற்பாடு வழங்கப்பட்டிருக்க வில்லை. | இக் கடன் மூலம் சபைக்கு 4.2 சதவீத வட்டி வருமானம் கிடைப்பதாகவும் பிரதிநிதிகளின் மாதாந்த கொடுப்பனவிலிருந்து கடன் தவனை அறவிடப்படுவதாகவும் அறிவிக்கிறேன். |

**3.4 பெறுகைகள்**

**ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மொரகல அரப்பட பாதையில் மண்சரிவு ஏற்பட்ட இடத்தில் பக்க மதில் நிர்மாணிக்கும் வேலைக்காக மேலதிகமாக செலுத்தியிருந்த ரூபா 39,001 வை ஒப்பந்தக்கார சங்கத்திடமிருந்து அறவிடுவதாக கணக்காய்விற்கு அறிவித்திருந்த போதும், அத் தொகையை குறைத்துக் கொள்ளாது வேலையின் நிறுத்தி வைத்தல் பணம் 2018 திசெம்பர் மாதம் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | மேலதிக கொடுப்பனவு மீள் அறவிடப்பட வேண்டும். | மேலதிக கொடுப்பனவு ரூபா 39,001 வை உரிய சங்கத்திடமிருந்து அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**தீர்க்கப்படாத கணக்காய்வு அவதானங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 154(1) உப பிரிவு பிரகாரம் காணி விற்பனையால் கிடைத்த பணத்திலிருந்து 1 சதவீதத்திற்கு சமமான வரி பிரதேச சபைக்கு அறவிடப்பட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணி பதிவாளர் அலுவலகத்திலிருந்து உரிய தகவல்களை பெற்று நிலுவை வருமானத்தை கணக்கிட்டு அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபை வருமான பரிசோதகர்களுக்கு இவ்வேலை ஒப்படைக்கப்பட்ட போதும் அவர்கள் புதிய அலுவலர்கள் ஆகையால் இவ் வேலையை செய்து கொள்ள முடியவில்லை எனவும், சபை சட்டத்தரணியின் உதவியை பெற்று முன் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | திவுரும்பிடிய நரியாமுள்ளஹேன காணி ஏலவிற்பனையில் பொது நடவடிக்கைகளுக்காக ஒதுக்கிய காணியிலிருந்து 22.61 பர்சஸ் குறைத்து சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. | உரிய காணி அளவை சுவீகரித்துக் கொள்ள அல்லது அதன் பெறுமதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரிய காணி அளவின் பெறுமதியை மதிப்பிட்டு ஏலவிற்பனைகாரரிடமிருந்து அறவிட செயற்படுவதாக அறிவிக்கிறேன |
| (இ) | வீதவரி அறவிட சபை அதிகார எல்லையிலுள்ள அனைத்து நிலையான சொததுக்களும் 05 ஆண்டுகளிற்கு ஒரு முறை மதிப்பிடப்பட வேண்டிய போதும், 2012 ஆண்டின் பின்னர் சொத்து மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சொததுக்கள் 05 ஆண்டுகளிற்கு ஒரு முறை மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டில் சொத்துக்களை மதிப்பிட வேலைகள் தயார் செய்யப்பட்டிருந்த போதும், நிலவிய தொற்று நோய் நிலைமை காரணமாக அரசின் கொள்கை ரீதியான தீர்மானத்தின் படி அவ்வேலையை 02 ஆண்டுகளால் பிற்போட வேண்டி ஏற்பட்டதாக அறிவிக்கிறேன். |